ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## சில விசேஷாம்சங்கள்

ப்ரபன்னஜன ஸந்தான கூடஸ்தர் என்று ப்ரஸித்தி பெற்றவரும், சந்தமிகு தமிழ்மறைகள் 24 ப்ரபந்தங்களில் 4 ப்ரபந்தங்களை வெளியிட்டருளியவரும், அவற்றில் உள்ள 4000 பாட்டுக்களில் 1296 பாட்டுக்கள் அருளிச்செய்தவரும், அவற்றிற்குக் கால வைபரீத்யத்தினால் க்ஷோபம் உண்டாக, மீண்டும் அவற்றை முற்றிலும் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு உபதேசித்து அருளியபடியால் ஆழ்வார் கோஷ்டியிலும் ஆசார்ய கோஷ்டியிலும் அந்வயம் உள்ள ஸ்ரீஸ்வாமி நம்மாழ்வார் இருக்க -

கண்ணிநுண்சிறுத்தாம்பினால் ஆழ்வாரை ப்ரத்யக்ஷீகரித்தருளி, நாலாயிர ப்ரபந்தங்களை உபதேசிக்கப்பெற்றவரும், ஸம்ஸ்க்ருத வேதங்களை ரிக், யஜுஸ், ஸாம, அதர்வண என வ்யாஸமஹர்ஷி வகுத்தருளினாற்போலே, தமிழ்மறைகளையும் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என நான்கு பிரிவுகளாக்கியருளினவரும், அவற்றிற்குத் தாளம் அமைத்து உத்ஸவங்கள் பண்ணியருளியவருமான ஸ்ரீமந் நாதமுனிகள் இருக்க -

திவ்ய ப்ரபந்தங்களை அனுஸந்தித்து அதன் பரீவாஹமாக ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தவரும், ஆழ்வாரே தமக்கும் தம் திருவடிஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் இங்கும் அங்கும் தஞ்சம் என்றும், அவரே வைஷ்ணவர்களுக்குக் குலபதி என்றும் அனுஸந்தித்தவராகிய ஸ்ரீஆளவந்தார் இருக்க -

தர்சன ப்ரவர்த்தகர் என்று ப்ரஸித்தி பெற்றவரும், தம் விஷயமாகத் தமிழ்மறையில் ஒரு ப்ரபந்தம் பாடப்பெற்றவரும், திவ்ய ப்ரபந்தங்களையே ஸதா அனுஸந்தித்துக்கொண்டிருந்தவர் என்று ப்ரக்யாதி பெற்றவருமான எம்பெருமானார் இருக்க -

திவ்ய ப்ரபந்த அனுஸந்தான காலங்களில் எல்லாம் இவரை முன்னிட்டுக் கொண்டே தொடங்குவதும், இவருடைய புகழ் பாடியே சாற்றுமுறை செய்வதுமாகிற ஏற்றம் இவருக்கு மட்டும் ஏன் கிட்டிற்று என்னில்:-

1. இவர் இந்த ஸம்ப்ரதாயத்துக்குச் செய்தருளியிருக்கும் உபகார விசேஷாதிசயங்கள் தான் காரணம். மற்றைய ஆசார்யர்கள் நித்யஸூரிகளின் அவதாரமாய் இவரொருவருமே பகவானுடைய ஸாக்ஷாத் அவதாரமாய் இருந்தது முதல் காரணம்.

2. இவர் தமக்கு முற்பட்ட ஆசார்யர்களான ஸ்ரீ நாத யாமுன யதிராஜர்கள் செய்தருளிய க்ரந்தங்களுக்கெல்லாம் பலவற்றுக்கு நேரில் வ்யாக்யானமிட்டும், மற்றவைகளைத் தம்முடைய ஸ்ரீஸூக்திகளில் உதாஹரித்து அவற்றின் கருத்தை வெளியிட்டும், அவர்களுடைய திருவுள்ளக் கருத்தை உபதேச பரம்பரையால் தாம் பெற்றபடியை நூற்றுக்கு மேற்பட்டவைகளாயும், ஸம்ஸ்க்ருதம், தமிழ், மணிப்ரவாளம், ப்ராக்ருதம் என்கிற பாஷைகளிலும், ஸங்க்ரஹ விஸ்தர ப்ரக்ரியையிலுமான தம்முடைய ஸ்ரீஸூக்திகளால் லோகத்தில் ஸ்தோத்ரங்களாகவும், காவ்யங்களாகவும், நாடகமாகவும் அவற்றைப் பரவச்செய்து நிலைநாட்டி அருளியது மற்றொரு காரணம்.

3. ஸ்ரீமந் நாதமுனிகளால் ப்ரவர்த்திக்கப்பட்டதாய், பல க்ரந்தங்களினால் ஸ்ரீ ஆளவந்தாரால் வளர்க்கப்பட்டதாய், எம்பெருமானாரால் நன்றாக ரக்ஷிக்கப்பட்டதுமான இந்த விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தை அகில தம: கர்சன தர்சனமாக்கியது மற்றொரு காரணம்.

4. ஸாரமாக அறியவேண்டியதான ச்ரிய:பதியான பகவானே தன்னை அடைவதற்குத் தானே உபாயம் என்கிற அர்த்தவிசேஷத்தைத் தம்முடைய ஸ்ரீஸூக்திகள் ஒவ்வொன்றிலும் ஸ்பஷ்டமாக நிரூபித்து அருளியது மற்றொரு காரணம்.

**5.** சந்தமிகு தமிழ்மறைகள் நித்யங்கள் என்றும், அவைகள் ஸ்ரீவைகுண்டத்திலும் நித்யர்களாலும் முக்தர்களாலும் பாடப்படுகிறது என்றும் நிரூபித்து அருளியது மற்றொரு காரணம்.

**6.** ஆழ்வார் ஸம்பந்தத்தினால் தான் திருமால் தாளில் தலை வைக்கமுடியும் என்றும், த்ரமிடோபநிஷத்தில் அந்வயம் இல்லாதவர்களையும் உஜ்ஜீவிப்பிப்பதற்காக ஆழ்வாரே தம்முடைய பரம க்ருபையினாலே பகவானுடைய ஸ்ரீசடாரியாய்த் திருவவதரித்தார் என்றும் அருளிச்செய்திருப்பது மற்றொரு காரணம்.

**7.** இந்த ஸம்ப்ரதாயத்தை நன்கு தெரிந்துகொள்ளாத சிலர் எம்பெருமானார் தாராளமான மனப்பான்மையை உடையவர் என்று கூறுவார்கள். இவர் மிகவும் குறுகிய மனப்பான்மை உடையவர் என்றும் கூறுவார்கள். இதைக் காட்டிலும் முற்றிலும் தவறானது வேறு ஒன்றும் இருக்கமுடியாது. ஒருவருடைய உண்மையான அபிப்ராயத்தை அறிவதற்கு அவர் அருளிச்செய்த க்ரந்தங்களே ப்ரமாணம் என்றும், அவர்களுடைய அனுஷ்டானங்களில் சிலவற்றையே நமக்குப் பின்பற்றும்படியாக இருக்கும் என்றும் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ரீதியின்படி நம் பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களைப் பராமர்சித்தால் அவர்களுக்கு ஸ்ரீதேசிகனுக்குப் போல ஸர்வலோக ஹிதமான அபிப்ராயம் இல்லை என்றே

சொல்லவேண்டும் என ஏற்படும். சரணாகதியே அகிஞ்சனர்களான நம் போல்வார்க்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் என்றும், அதுவே பக்தியோக நிஷ்டர்களுக்கு அங்கமாய் நின்று, பக்தியோக அனுஷ்டானத்தில் ஏற்படும் ஏற்றக்குறைவுகளை நீக்கி, அதைத் தலைக்கட்டிக் கொடுக்கும் என்றும் நிரூபித்தருளிய பெருமை இவருடையதே. த்ரைவர்ணிகர்களுக்கும் அதிலும் ஸந்யாஸாச்ரமிகளுக்குத் தான் மோக்ஷம் என்றும் பரவியிருந்த கொள்கைகள் உசிதமல்ல, எந்த வர்ணத்தாராயினும், எந்த ஆச்ரமியானாலும், அநந்ய கதியாய் எம்பெருமானிடத்தில் சரணாகதி செய்தால் மறுபிறவி இன்றி மோக்ஷம் பெறலாம் என்று நிலைநாட்டிய பெருமை இவருடையதே, பிறப்பினால் உண்டாகிய ஏற்றத்தாழ்வு சாஸ்த்ர ஸம்மதமே ஆயினும், அது மோக்ஷம் பெறுவதற்குத் தடையாகவோ ஸாதகமாகவோ இருக்காது என்று நிரூபித்தருளியவர் இவரே. இப்படிப்பட்ட அம்சங்களை இவரைத் தவிர வேறு ஒருவரும் நிரூபிக்க முன்வரவில்லையே? உண்மை இப்படி இருக்க, இவரைக் குறுகிய மனப்பான்மையர் என்பது உசிதமாகாதல்லவா? இந்தக் கொள்கையைத் தாம் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் பரக்க நிரூபித்தருளியது மற்றொரு காரணம்.

8. மற்ற ஆசார்யர்கள் தங்கள் ஸ்ரீஸூக்திகளில் வேதவாக்யங்களை உதாஹரித்து இருப்பதினால் அவற்றை த்ரைவர்ணிகர்கள் அல்லாதார் அப்யஸிக்க இடம் இல்லாமல் போய்விட்டது. ஸர்வரும் அதிகரிக்கலான த்ரமிட பாஷையில் வெளியிடப்பட்ட திவ்ய ப்ரபந்தங்களுக்கு உரையிட்டவர்களும் உபநிஷத் வாக்யங்களை மேற்கோளாக உதாஹரித்திருப்பதால் அந்த வாக்யங்களை எல்லோரும் காலக்ஷேபம் செய்யமுடியாமல் போய்விட்டது. இவர் ஒருவர் தான் தம்முடைய ரஹஸ்ய க்ரந்தங்களில் ஓரிடத்திலாவது ச்ருதி வாக்யங்களை உதாஹரிக்காமல் அதின் அர்த்தத்தை மட்டும் அனுவதித்து, "ஓதாது ஓதும் வேதாந்தவாரியன்" என்று ஓதுகிறபடியே, இத்யாதிகளை அருளிச்செய்திருப்பதால் இவருடைய ஸ்ரீஸூக்திகளே ஸர்வோபஜீவ்யங்களாய் இருக்கும் என்பது மற்றொரு காரணம்.

9. நமது ஸம்ப்ரதாயத்தின் கொள்கைகளை எல்லாம் ஒன்றுசேர்த்து எல்லோரும் அறிந்துகொள்ளும்படியாய் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்ற ஒரு க்ரந்தத்தை ஸர்வலோக ஹிதார்த்தமாக அருளிச்செய்தது தான் இவரை இப்படி விசேஷித்துப் போற்றுவதற்கு விசேஷ காரணம். இந்த க்ரந்தத்தில் கூறப்படாத அம்சமில்லை. இதில் சொல்லப்படாத அம்சம் வேறிடத்தில் இருக்கமுடியாது என்று இதன் பெருமையை நம் முன்னோர்கள் கொண்டாடினார்கள்.

10. இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, கவிதார்க்கிக ஸிம்ஹம் என்று எல்லோரும் அங்கீகரிக்கும்படியான ஏற்றம் பெற்றபடியால் ஸம்ஸ்க்ருத பாஷையில் அநிதர ஸாதாரணமான பாண்டித்யம் இருந்தும், அதற்கு அனுகுணமாகப் பல ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்திருந்தும், சந்தமிகு தமிழ்மறைகளை அத்யயனம் செய்தே தாம் முன்பு தெளியாத மறைநிலங்களைத் தெளிந்தோம் என்றும், தம்மை

த்ரமிடவேத சாகாத்யாயி என்றும் நிரூபித்துக்கொண்டது தான் இப்பெருமைக்கு முக்யமான காரணமாகும்.

நன்றி: ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்வாமி வெளியிட்ட சந்தமிகு தமிழ்மறை.

****************



**சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு**